மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் செவ்வாய்கிழமை
அ.வ.எண். 22/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: கருப்பசாமி | தேதி : 14.10.25 |
| வயது : | த/பெ : சங்கரலிங்கம் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>14.10.25 குறுக்கு விசாரணை</u>

1. தாவா வழக்கினை அடைப்பை நீக்க கோரி தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 3 அயிட்டங்கள் சேர்ந்து 1 தபசிலுக்கு வழக்கு போட்டுள்ளேன். அதன் சர்வே எண்கள். 311/1, 311/2, 311/5 ஆகும். சர்வே எண். 311/1 ல் தென்புறம் 73 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன். சர்வே எண் 311/2 ல் தென்புறம் 24 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன். மேற்படி சர்வே எண்கள் 311/1, 311/2 ஆகியவற்றை சேர்த்து 1 ம் தபசிலாக காண்பித்துள்ளேன்.

2. சர்வே எண் 311/5 ல் 3 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன். அது தாவா 2 ம் தபசில் ஆகும். 1 ம் தபசிலின் கிழக்கில் புல எண் 311/3 ம், தெற்கில் புல எண் 311/5, 311/6 ம், மேற்கில் தென்வடல் ரோடும், வடக்கில் சர்வே எண் 311/1, 2 ன் மீதம் உள்ள நிலமும் எல்கைகளாக உள்ளன. நான் தாவா 1 ம் தபசில் சொத்தினை வா.சா.ஆ 2 ன் படி கிரையம் வாங்கியுள்ளேன். 2 ம் தபசில் சொத்தினை வா.சா.ஆ 3 ன் படி கிரையம் வாங்கியுள்ளேன்.

3. வா.சா.ஆ 2, 3 ஆவணங்களின் மூல பத்திரம்தான் வா.சா.ஆ 1 என்றால் சரிதான். நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். வா.சா.ஆ 1 ன் படி ஜோசப் சன்னி என்பவர் சர்வே எண்கள் 311/1, 311/2, 311/5 ஆகியவை சேர்த்து மொத்தம் 1 ஏக்கர் கிரையம் வாங்கியுள்ளார். மேற்படி 3 சர்வே எண்களையும் சேர்த்து ஒரு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.14 19:51:18 +0530

தபசிலாக தான் கிரையம் வாங்கப்பட்டள்ளது என்றால் ஆம். வா.சா.ஆ 1ல் கண்டுள்ள தபசிலின் வடக்கு பக்கம் சர்வே எண் 311/1 ன் மீதம் நிலம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் சர்வே எண் 311/2 ன் மீதம் நிலம் என்றும், மேற்கு பக்கம் பாதை என்றும், தெற்கு பக்கம் சர்வே எண் 311/6 ன் புஞ்சை நிலம் என்றும் உள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ 2, 3 ஆவணங்களை எழுதிக்கொடுத்தவர் ஜோசப் சன்னியின் மனைவி எயிடா சன்னி ஆவார். அதிகார முகவர் அஸ்வதி மூலம் மேற்படி ஆவணங்கள் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 2, 3 ஆவணங்களில் ஜோசப் சன்னியின் இறந்த தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஜோசப் சன்னியின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டால் தான் அவர் உயிருடன் உள்ளாரா அல்லது இறந்துவிட்டாரா என்று உறுதியாகும் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ 2, 3 ல் ஜோசப் சன்னியின் வாரிசு பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஜோசப் சன்னியின் வாரிசு சான்று தாக்கல் செய்தால் தான் வாரிசுகள் பற்றி தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2, 3 ஆவணங்களுடன் எயிடா சன்னி ஜோசப் சன்னியின் மனைவி என்பதற்கான எந்த ஆவணமும் இணைக்கப்படவில்லை என்றால் ஆம். வா.சா.ஆ 2, 3 ல் எயிடா சன்னியின் அடையாள ஆவணம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

6. ஜோசப் சன்னியின் மனைவி அல்ல என்றும் நானும், அஸ்வதியும் சேர்ந்து வா.சா.ஆ 2, 3 ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. எயிடா சன்னி அஸ்வதிக்கு எழுதிக்கொடுத்த அதிகார ஆவணத்தினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அதிகார ஆவணத்தை தாக்கல் செய்தால் தான் எயிடா சன்னி அஸ்வதிக்கு அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா அல்லது இல்லையா என்பது குறித்து அதன் விபரங்கள் தெரியவரும் என்றால் என்னிடம் அந்த ஆவணம் இல்லை.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.14 19:51:24 +0530

7. மேற்படி பொது அதிகார ஆவணம் தாக்கல் செய்தால் தான் தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் அதில் உள்ளதா என்பது குறித்து தெரியவரும் என்றால் சரிதான். அந்த அதிகார ஆவணம் யார் வசம் உள்ளது என்றால் அதிகார ஆவணம் வாங்கியவரிடம் தான் இருக்கும். அதனை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆம். எயிடா சன்னி அஸ்வதிக்கு அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த 2011 க்கு பின்னிட்டு 2013 ல் தான் வா.சா.ஆ 2, 3 ன் படி நான் கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் ஆம்.

8. எனக்கு கிரைய ஆவணங்கள் எழுதிக்கொடுக்கும் போது எயிடா சன்னி உயிருடன் இருப்பதாக சான்றிதழ் தாக்கல் செய்தார்களா என்றால் ஆம். அந்த சான்றிதழை தாக்கல் செய்தால் தான் எயிடா சன்னி கிரைய தேதியில் உயிருடன் இருந்தாரா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ல் வா.சா.ஆ 1 க்கு விரோதமாக வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பக்க எல்கைமால்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1, 2 ல் வெவ்வேறு எல்கைமால்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் நான் வழக்கிற்காக அதனை மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ 1 க்கு விரோதமாக வா.சா.ஆ 3 ல் கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு பக்க எல்கைமால்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் (இணையவழி வில்லங்க சான்றிதழ்) 21, 22 பதிவுகளில் எயிடா சன்னி எனக்கு கிரையம் கொடுத்தது பற்றி பதிவாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி வில்லங்கசான்றிதழ் பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.சா.ஆ 1 ல் 9 ம் பதிவில் ஜோசப் சன்னி கிரையம் வாங்கிய பதிவு உள்ளது என்றால் ஆம்.

10. வா.சா.ஆ 5 கூட்டு பட்டாவில் பத்மநாபன் நாயர் மகன் பெயர் அசோக்குமார் பெயரும் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண். 311/2 என்றால் ஆம். சர்வே எண் 311/2 ல் நான் கிரையம் வாங்கிய 24 சென்ட் போக மீதம் நிலம் வா.சா.ஆ 5 ல் கண்ட மற்ற நபர்களுக்கு பாத்தியம் என்றால் சரிதான். பி.சா.ஆ 1 ல் வரிசை எண் 8 ல் ஆவண எண். 490/1994 ன்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.14 19:51:31 +0530

படி அசோக்குமார் சர்வே எண் 311/2ல் தென்புறம் 37 செண்ட் கிரையம் வாங்கியுள்ளதாக பதிவு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அவர் வாங்கியிருக்கலாம்

11. அசோக்குமாரின் மேற்படி கிரையம் குறித்து தெரியாது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசோக்குமாரின் கிரையத்திற்கு பின்னிட்டு தான் ஜோசப்சன்னி சர்வே எண். 311/2 ல் தென்புறம் 24 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அசோக்குமார் கிரையம் வாங்கிய அதே இடத்தினை தான் ஜோசப் சன்னியும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ 4 முதல் 6 கூட்டு பட்டாக்கள் என்றால் சரிதான். அவைகளில் பிரதிவாதிகள் பெயரும் உள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ 4 முதல் 6 கூட்டுப்பட்டாவாக உள்ளதால் யாருக்கு எந்த பாகம் என்று பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தனிப்பட்டாவாக பிரித்தால் தான் சொத்துக்கள் பிரிக்கப்படும் என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் கண்ட மற்ற நபர்களை சேர்த்தால் தான் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்று தெரியும் என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் கண்ட நபர்கள் தாவா வழக்கில் முக்கிய நபர்கள் என்றால் சரியல்ல.

13. பிரதிவாதிகள் தான் இடத்தை அடைத்துள்ளதால் அவர்களை மட்டும் சேர்த்துள்ளேன். எனக்கு வா.சா.ஆ 2, 3 ஐ எழுதிக்கொடுத்த அதிகார முகவரை அதற்கு முன்பு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு எயிடா சன்னியின் அனுபவத்தில் இருந்தன. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்துக்களை எயிடா சன்னியின் அதிகார முகவர் சர்வேயர் மூலம் அளந்து காண்பித்தார். அப்போது அந்த இடத்தில் தென்னை மரங்கள் இருந்ததா என்றால் இல்லை.

14. நான் கிரையம் வாங்கிய பிறகு உட்பிரிவு செய்ய மனு கொடுத்தேனா என்றால் ஆம். அதன் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு எந்த மனுவும் கொடுக்காததால் தான் அதனை தாக்கல் செய்யவில்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.14 19:51:36 +0530

என்றால் சரியல்ல. மனு கொடுத்ததால் தான் கூட்டு பட்டா வழங்கப்பட்டது. நான் கிரையம் வாங்கிய தேதியில் இருந்து தாவா சொத்துக்கள் என் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

15. வழக்கிற்காக அனுபவம் என் வசம் இருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2, 3 ஆவணங்களில் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புஞ்சை நிலத்திற்கு அளவுகள் குறிப்பிடமாட்டார்கள். நான் பிரிவின்றி கிரையம் பெறுவதாக ஆவணங்களில் சொல்லப்படாத நிலையில் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிபிட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

16. நீதிமன்ற ஆணையர் 10.02.2024 ல் முதல் முதலாக தாவா சொத்துக்களை அளவிடு செய்தபோது எனக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்த அதிகார முகவர் மட்டும் தான் வந்திருந்தார் என்றால் சரியல்ல. நான் 10.02.2024 ல் ஆணையர் அளவீடு செய்தபோது வந்திருந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்துப்பார்த்துள்ளேன். அறிக்கையில் தாவா சொத்தில் தென்னை, மா, நெல்லி மரங்கள் இருந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆம். அந்த மரங்கள் வைக்கப்பட்டு 25 வருடங்கள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1, ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 2, சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. வா.சா.ஆ 8 தவறான சங்கதிகளுடன் அனுப்பட்ட அறிவிப்பு என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 ல் தெற்கு பக்கம் சர்வே எண்கள் 311/5, 6 எனது இடங்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் என் இடம் இல்லை என்பதால் குறிப்பிடவில்லை. 2 ம் தபசில் சொத்தின் வடக்கில் புல எண் 311/2 நிலம் என்று மட்டும் தான் வா.சா.ஆ 8 ல் சொல்லியுள்ளேன் என்றும் என் இடம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.10.14 19:51:40 +0530

18. வா.சா.ஆ 2ல் தெற்கு பக்கம் என்னுடைய இடம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எயிடா சன்னி, அஸ்வதி ஆகியோர்களை தரப்பினராக சேர்த்தால் தான் ஜோசப் சன்னியின் இறப்பு மற்றும் வாரிசு குறித்து தெரியவரும் என்றால் சரியல்ல. எயிடா சன்னி, அஸ்வதி தாவா வழக்கிற்கு முக்கிய தரப்பினர் என்றால் சரியல்ல. அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காத தோஷத்தால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தவறான சொத்து விபரத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.10.14 19:51:45 +0530